# வாலிபத்தின் காலடியில் நாம்

மாணவன்: எம். எல். முஹம்மத் மர்ஜான் (ஆண்டு - 04)

வாலிபர்கள் சமூகத்தின் உயிர் நாடிகள்; வலிமை வாய்ந்த சக்திகள்; அவர்கள் ஒன்றாக ஒரே அணியில் இணைந்தால் மாபெரும் செயல்களை ஆற்ற முடியும்.

ஆனால் வாலிபப் பருவமானது குயவனின் கையில் உள்ள மண் பானையைப் போன்றது சூழ் நிலைகள், சுற்றுப் புறங்கள், சந்தர்ப்பங்கள் அவர்களின் மனதில் பெரும் மாற்றங்களை எளிதில் ஏற்படுத்தி விடுகின்றன. தீய சக்திகளின் கவர்ச்சிக்கு அவர்கள் ஆளாக நேரும் போது தீயவர்களாகவும் அதே வாலிபர்கள் நன்மையின் அரவணைப்பில் ஆட்படும் போது மாபெரும் ஒழுக்க சக்தியாகவும் உருப் பெறுகிறார்கள். உலகின் பெரும் இயக்கங்கள் எல்லாம் அவை நல்லவையாக இருந்தாலும், தீயவையாக இருந்தாலும் வாலிபர்களின் துடிப்பான உழைப்பில் தியாகத்தில் வளர்ந்தவைதான்.

வாலிபன் என்றால் யார்? என்ற வினாவுக்கு மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்கள் வழங்கியதொரு வரைவிலக்கணத்தை தருகின்றார்கள். “வாலிபம் என்பது நன்மையின் மொத்த உருவத்திற்கோ, தீமையின் மொத்த உரவத்திற்கோ பெயரல்ல. மாறாக சூடேற்றப்பட்ட இரத்தத்தின் பெயராகும். புத்தம் புதியவற்றைக் கவர்ந்து கொள்ளும் ஆற்றலுக்குப் பெயராகும். ஒரு பொருள் அது முயற்சி செய்து அடைய வேண்டிய ஒன்று என்று மனதில் தோன்றி விட்டால் அது நல்லதோ, கெட்டதோ உயிரைக் கொடுத்தேனும் அதை அடைந்திட நினைக்கும் ஒரு சக்திக்குப் பெயராகும்.

இன்று எமது சமூகத்தில் காணப்படுகின்ற நாளைய தலைவர்கள் என வர்ணிக்கப்படும் வாலிப சமுதாயம் சினிமாவிற்கும், போதைப் பொருள்களுக்கும் அடிமைப்பட்டு இலட்சியங்களையும் குறிக்கோள்களையும் மறந்து வாழ்க்கையைத் தொடர்வதைப் பார்க்கலாம். இதற்குச் சூழல் மாத்திரம் காரணமல்ல அவனது வெளித் தொடர்புகள் மற்றும் அவனுடன் ஒன்றாகப் பழகக்கூடிய ஒரு சிலரின் வழிகாட்டுதல்கள் தான் இந்தச் சினிமாவும் போதைப் பொருளும்.

ஸஹபாச் சமுதாயத்திலே காணப்பட்ட வாலிபர்கள் தங்களுண்டைய வாலிபத்தை இஸ்லாத்தின் வளர்ச்சிக்கே செலவிட்டார்கள். ஆனால் கைசேதம் எமது சமுதாயத்தில காணப்படுகின்ற வாலிபர்கள் மேற்கத்திய கலாச்சாரங்களைக் கொண்டு மூளைச்சலவை செய்யப்பட்டிருக்கிறார்கள். நபிகளாரின் கூற்று எமக்கு மறந்துவிடவில்லை நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். **முதுமை வருவதற்கு முன்பு வாலிப்பருவத்தை ஒழுங்கான முறையில் பயன்படுத்திக்கொள்.** (ஆதாரம்: ஹாகிம்)

இந்த ஹதீஸ் எமக்கு வாலிபப் பருவத்தின் முக்கியத்துவத்தைப்பற்றிப் பேசுகிறது. நாளைய மறுமையிலே வாலிபப் பருவத்தை எவ்வாறு கழித்தாய் என்று இறைவன் கேட்டால் நான் என்ன பதில் சொல்வேன் என்று நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். சீரழிக்கும் சினிமாவும் பெண்களும் வாலிபத்தின் சவாலல்லவா? எப்போது நாம் இவைகளிலிருந்து தவிர்ந்து வெற்றி பெறுவது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். **வாலிபர்களே! உங்களில் வசதி உள்ளவர் திருமணம் முடித்துக்கொள்ளட்டும் ஏனெனில் அது பார்வையைத் தாழ்த்தக் கூடியதாகவும் அபத்தை (மர்மஸ்தானத்தை) பாதுகாக்கக்கூடியதாகவும் உள்ளது. யார் அதற்கு (திருமணத்திற்கு) சக்தி பெறவில்லையோ அவர் நோன்பு நோற்கட்டும். அது அதற்குப் பரிகாரமாக அமையும்.** (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

இஸ்லாம் வாலிபர்களின் சுதந்திரத்தைச் சிரையிலடைக்கவில்லை அவர்கள் தீய காரியத்தின்பால் சென்றுவிடக் கூடாது என்பதில் மிகவும் உன்னிப்பாக இருக்கின்றது. இப்படியாக வாலிபர்களுக்கு அழகிய திட்டங்களையும் ஆலோசனைகளையும் இஸ்லாம் முன்வைப்பதைப் பார்க்கலாம்.

அன்று நபிகளாரின் படையில் இருந்தவர்களில் அதிகமானவர்கள் சூடேற்றப்பட்ட இரத்தத்தின் சொந்தக்காரர்கள்தான் அதனால் தான் அரேபிய தீபகற்பத்தை அன்றிய பகுதிகளில் இஸ்லாம் பரவியது அன்று வாழ்நத ஒவ்வொரு வாலிபரும் மனதில் உறுதிபூண்டார்கள் அதனால் தான் தான் உயிரோடிருந்து இஸ்லாம் மடிவதைவிட தான் மடிந்து இஸ்லாம் உயிரோடிருப்பது சிறந்தது எனக் கருதினார்கள். நாங்கள் இன்று இஸ்லாம் மேற்கத்தியர்களால் கொச்சைப்படுத்தப் படும்போது ஏன் மௌனித்து நிற்கிறோம். வாலிபர்களே! விழித்தெழுங்கள் உறங்கியது போதும் சுவனம் கிடைக்கும் வரை ஒரே அணியில் நின்று போராடுவோம்.

## அல்லாஹ்வின் நேசர்களும் ஷைத்தானின் தோழர்களும்

### அல்லாஹ்வின் நேசன்

அல்லாஹ்வின் நேசர்கள் யாரெனில் குர்ஆன் ஸுன்னா ஆகியவற்றைப் பின்பற்றி நடக்கக்கூடிய இறையச்சமுள்ள மு.்.மினானவர்கள் அல்லாஹ் கூறுகின்றான். **“மு.ஃமின்களே! அறிந்துகொள்ளுங்கள் நிச்சயமாக அல்லாஹ்வின் நேசர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை அவர்கள் ஈமான்கொண்டு பயபக்தியுடன் நடந்துகொள்வார்கள்”** (யூனுஸ் 62 : 63)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். **நிச்சயமாக எனது நேசர்கள் அல்லாஹ்வும் மு.ஃமீன்களில் உள்ள நல்லடியார்களுமாவார்கள்.** (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

### ஷைத்தானின் தோழர்கள்

ஷைத்தானின் தோழன் யாரென்றால் இரும்பினால் தங்களை அடித்துக்கொண்டு நெருப்பினைச் சாப்பிட்டுக்கொண்டு இன்னோரன்ன ஷைத்தானிய (நெருப்பி வணங்கிகள் புரியக்கூடிய) செயல்களைச் செய்துகொண்டு அல்லாஹ் அல்லாதவர்களிடம் பிரார்த்தித்துக்கொண்டு குர்ஆன் ஸுன்னாவைப் பின்பற்றாது ரஹ்மானுக்கு முரண்செய்து வாழ்கின்ற பித்அத் வாதிகளாவர்.

அல்லாஹ் கூறுகின்றான். **“எவர் அளவற்ற அருளாளனின் அறிவுரையை புறக்கணிக்கிறாரோ அவருக்கு ஒரு ஷைத்தானை சாட்டுவோம். அவன் அவருக்கு தோழனாவான் அவர்கள் நல் வழியை விட்டும் மனிதர்களை தடுக்கின்றனர் தாம் நேர்வழிபெற்றோர் எனவும் எண்ணுகின்றனர்”.** (ஸுஹ்ருப் 36:37)